

மலாலா



பெண் கல்வி ஆர்வலர்

- இந்திரா ஸ்ரீவத்ஸா

மலாலா 1997இல், ஓர் விடியற்காலையில் பிறந்தாள். அவள் ஜியாவுதீன் யூசுப்சாய் மற்றும் டார் பெகாய் ஆகியோருக்கு முதல் குழந்தை ஆவாள். அவர்கள் பாக்கிஸ்தானில் உள்ள ஸ்வாட் பள்ளத்தாக்கில் பரவியுள்ள மிங்கோரா என்ற பெரிய நகரத்தில் வாழ்ந்தனர். அவர்களின் வீடு ஜியாவுதீன் நிறுவிய பெண்களுக்கான குஷால் பள்ளிக்கு எதிரே அமைந்திருந்தது. தன்னுடைய நாட்டில், சில புதிய அப்பாக்கள் இருப்பது போல, மலாலாவின் தந்தை தனது குழந்தை பெண்ணாக பிறந்ததில் வருத்தப்படவில்லை. ஜியாவுதீன் தனது பாஷ்டூன் மக்களை மிகவும் நேசிப்பவர், ஆனால் அவர் அவர்களின் சில மரபுகளை விரும்பாதவர். ஜியாவுதீன், தன் நண்பர்கள் மற்றும் குடும்பத்தினரிடம், ஒரு மகனைப் போலவே, அவள் தொட்டிலில் உலர் பழங்கள், மிட்டாய்கள் மற்றும் நாணயங்களை வீசுமாறு கேட்டுக்கொண்டார்.





மலாலா, நோட்டுப் புத்தக வாசனையுடன் வளர்ந்தாள். அவளுடைய முதல் சகோதரன் வருவதற்கு அதிக காலம் எடுக்கவில்லை. அவரது தந்தையின் பள்ளியைப் போலவே அவனிற்கும் குஷால் என்று பெயரிடப்பட்டது.

பள்ளி முடிந்ததும் இரண்டு குழந்தைகளும் ஒன்றாக வகுப்பறைகளில் ஓடி விளையாடுவார்கள் அல்லது அண்டை வீட்டாருடன் கண்ணாமூச்சி விளையாடுவார்கள். கூரையில் பட்டங்களை பறக்கவிட்டு, வானத்தைத் தொட முயல்வார்கள். மலாலாவும், குஷாலும் பனி உருகாமல் இருந்த மலை எலுமிலிருந்து, நகரத்தைப் பார்ப்பார்கள்.



மலாலா தனது தாத்தாவின் கிராமத்தை நேசிப்பவள், மலைகளில் மாசுபாட்டிலிருந்து வெகு தொலைவில் மிங்கோராவில் உள்ளது அக்கிராமம். அங்கு, ஏரிகள் மற்றும் நீர்வீழ்ச்சிகள் தூய்மையாகயிருக்கும், முந்திரி கொட்டைகள் ஏராளமாக இருக்கும், தேன் சுவையாகயிருக்கும். குளிர்காலத்தில், மக்கள் பனிகரடிகளை உருவாக்குவார்கள்.

ஆனால், திருமணத்திற்காக முதியவருக்கு விற்கப்பட்ட ஷாஹிதாவைப் போன்ற எல்லா கிராமத்துக் கதைகளையும் மலாலா விரும்பாதவள். பாஷ்டூன் மலைகளில், பெண்களை விட, ஆண்கள் சமூகத்திலும் பணியிடத்திலும் அதிகம் காணக்கூடியவர்கள். பெண்கள் வீட்டில் தங்கி ஆண்களுக்குக் கீழ்ப்படிய வேண்டும். மலாலாவின் தாயைப் போலவே, பெரும்பாலான பெண்களால் படிக்க அல்லது எழுத முடியாது.



மலாலா மிங்கோராவில் உள்ள தனது வீட்டின் கூரையில் மீது ஏற விரும்புவாள். அவள் நகரத்தின் சத்தம், சலசலப்பு ஆகியவற்றைக் கேட்பாள். பறவைகளின் சத்தம், மற்றும் அவள் தந்தை ஏலக்காய் டீ குடிக்கும் போது அவரது நண்பர்களுடன் அரசியல் பேசிவதை கேட்க விரும்புவாள்.

ஒரு சக்திவாய்ந்த மற்றும் வன்முறை அரசியல் குழுவான தாலிபான்கள் மற்றொரு பள்ளிக்கு தீ வைத்துள்ளனர் என்று அவர்கள் பேசினர். மலாலாவின் தந்தையும் அவரது நண்பர்களும் தாலிபான்களை வெறுத்தனர். தாலிபான்கள் மாணவர்கள் அடக்கமாக இருக்க வேண்டும் என்று விரும்பினார்கள், மேலும் அவர்கள் புனித குரானுக்கு மிகவும் பழமைவாய்ந்த விளக்கங்களைக் கொண்டுள்ளனர். மலாலாவின் தந்தையும் அவரது நண்பர்களும் தாலிபான்களை ஒரு அறியாமை குழு என்று அழைத்தனர். அது பயங்கரமான பிரச்சினைகளை ஏற்படுத்தும் என்றும் கவலைப்பட்டனர்.

ஜியாவுதீன் தனது மகளிடம் அடிக்கடி கருத்துக் களைப் பகிர்ந்து கொள்வார். மலாலா சிந்தனைமிக்க பெற்றோரைப் பெற்ற அதிர்ஷ்டசாலி என்பதை அவள் அறிந்தாள். அவளிற்கு ஒரு பாஷ்டோ பாடலை அம்மா பாடுவாள்:

"தோட்டத்தில் புறாக்களை கொல்லாதீர்கள். நீங்கள் ஒன்றைக் கொன்றால், மற்றவை வராது."

இதன் அர்த்தம் என்ன என்று மலாலா சிந்தித்தாள்.

அப்பகுதியில், அக்டோபர் 8, 2005யில் பயங்கர நிலநடுக்கம் ஏற்பட்டது. மலை கிராமங்கள் தூசிகளாயின.

விரைவில் மலாலா தன் தந்தை வேறு எதையோ நினைத்து கவலைப்படுகிறார் என்பதை உணர்ந்தாள். அருகிலுள்ள தாலிபான்களின் தலைவனான ஃபஸ்லுல்லா, ஜியாவுதீனை பயமுறுத்தினார். ஃபஸ்லுல்லா, ஜியாவுதீனின் பெண்களுக்கான பள்ளியை-மூட விரும்பினார்.



ஃபஸ்லுல்லா மக்களின் நிலநடுக்கம் பற்றிய சோகத்தைப் தன் பக்கம் பயன்படுத்தினார். நேரம் மற்றும் நேரம், தனது உள்ளூர் வானொலி நிலையம் மூலம், அவர் பேசினார். மக்களின் பாவங்களே நிலநடுக்கத்தை ஏற்படுத்தியது என்று அவர் கூறினார். அவர் மக்கள் இசையைக் கேட்பதை நிறுத்தக் கேட்டுக்கொண்டார். திரைப்படம் பார்ப்பதையும் நிறுத்தக்கூறினார். இவ்வாறு, செய்தால் நன்மையே நடக்கும் என்றார்.

மலாலாவின் தந்தை மனம் உடைந்தார். அவர், சுதந்திரத்தை அச்சுறுத்த மதத்தைப் பயன்படுத்துவதை நிராகரித்தார்.



ஆனால் மக்கள் கவலைப்பட்டனர்: ஃபஸ்லுல்லா "சொல்வது உண்மையாய் இருந்தால் என்ன செய்வது?" அச்சங்கள் பள்ளத்தாக்கில் குடியேற ஆரம்பித்தன. சிலர் தொலைக்காட்சிகள், கணினிகள், சீடிக்கள் மற்றும் பிற பொருட்களை தீயில் வீச தொடங்கினர். ஆனால் இன்னும் அதிகமாக செய்ய வேண்டும் என்று தாலிபான்கள் வலியுறுத்தினர்.



மக்கள் நடனமாடுவதை நிறுத்தினர். அழகு நிலையங்கள் மூடப்பட்டன. தாடி வளர்க்க வேண்டும் என்று தாலிபான்கள் கூறுவதால் ஆண்கள் ஷேவிங் செய்வதை நிறுத்தினர். பெண்களின் உடலும், முகமும் பர்காக்களால் மூடப்பட்டன - தலை முதல் கால் வரை நீண்ட துணி ஆடைகளையே அவர்கள் அணிந்தனர். தாலிபான்கள் ரோந்து பணியில் ஈடுபட்டனர். தாலிபான் உறுப்பினர்கள் தங்களுக்குக் கீழ்ப்படியாதவர்களைக் கைது செய்தனர். புதிய விதிகளை எதிர்த்தவர்களுக்கு சவுக்கடி அல்லது கொலை தண்டனை உத்தரவிட்டனர். ஜியாவுதீன் பயந்தார், ஆனால் அவர் பணியவில்லை. 2008 செப்டம்பரில் செய்தித்தாள்கள் மற்றும் தொலைக்காட்சி நிலையங்கள் உள்ளடக்கிய ஒரு உரையில் மலாலாவை தாலிபான்களுக்கு எதிராக பேச அவர் அனுமதித்தார். அங்கே அவள், “தாலிபான்களுக்கு எவ்வளவு தைரியம், எனது கல்விக்கான அடிப்படை உரிமையை பறிக்கின்றனர்?" அப்பொழுது அவளுக்கு பதினொரு வயதுதான். 2008 ஆம் ஆண்டு முடிவடையும் போது, தாலிபான் மற்றொரு தடையை அறிவித்தனர்: ஜனவரி 15, 2009 முதல் பெண்கள் பள்ளிக்குச் செல்ல அதிகாரம் இல்லை.



"அவர்கள் என்னை பள்ளிக்குச் செல்வதை எப்படித் தடுக்க முடியும்?" மலாலா வருத்தமடைந்தார். அவளுடைய நண்பர்களும் கோபப்பட்டனர். "அவர்கள் ஏற்கனவே நூற்றுக்கணக்கான பள்ளிகளை தகர்த்துவிட்டனர், யாரும் எதுவும் செய்யவில்லை." அப்போது ஒரு வாய்ப்பு அவர்களுக்கு வந்தது. பெண்கள் மற்றும் கல்வி பற்றி எழுத மலாலா நியமிக்கப்படுகிறாள். குல் மகாய் என்ற புனைப்பெயரில் எழுதப்பட்ட அவளது முதல் வலைப்பதிவு இடுகை, பிரிட்டிஷ் ஒலிபரப்புக் கழகத்தின் இணையதளத்தில் தோன்றியது.

ஒரு பாகிஸ்தான் பள்ளி மாணவியின் நாட்குறிப்பு
சனிக்கிழமை, ஜனவரி 3, 2009

<u>நான் பயப்படுகிறேன்</u>

"இராணுவ ஹெலிகாப்டர்கள் மற்றும் தாலிபான்களுடன் நான் நேற்று ஒரு பயங்கரமான கனவு கண்டேன்."

மலாலாவின் வார்த்தைகள் தாலிபான்களை நிறுத்தவில்லை. தாலிபான்கள் குழு வடக்கே சென்று இன்னும் அதிக வன்முறையைப் ஏற்படுத்தியது.





விரைவில் பாகிஸ்தான் அரசுக்கும் தாலிபான்களுக்கும் இடையே அமைதி ஒப்பந்தங்கள் உருவாகியது. ஆனால் ஒப்பந்தங்கள் இறுதியில் வேலை செய்யவில்லை. தாலிபான்கள் தொடர்ந்து மக்கள் மீது வன்முறையை பிரயோகித்து வந்தனர். பின்னர் டோர்ன்கள் மற்றும் துப்பாக்கிகள் பள்ளத்தாக்கிற்கு வந்தன. போர் ஆரம்பித்தது.

மலாலாவும் அவரது குடும்பத்தினரும் தங்கள் வீட்டைக் விட்டு, தாத்தா பாட்டி வசிக்கும் கிராமத்திற்குச் சென்றனர். அவர்கள் இறுதியில் வீடு திரும்புவதற்கு முன், மூன்று மாதங்களுக்கு நான்கு நகரங்களில் தங்கினர். மிங்கோரா மீண்டும் அழிந்தது. ஆனால் தாலிபான்கள் விரட்டியடிக்கப்பட்டனர். பெண்கள் மற்றும் அனைவரும் படிக்கும் வகையில் பள்ளிகள் புனரமைக்கப்பட்டன. அனைவரும் கல்வி கற்க வேண்டும் என்று மலாலா விரும்பினாள்.

குழந்தைகளின் உரிமைகளை ஊக்குவிக்கும் கபால் கோர் அறக்கட்டளையுடன் தொடர்புடைய குழந்தைகள் சபையின் பேச்சாளராக மலாலா தேர்ந்தெடுக்கப்பட்டாள். இந்த தலைமைப் பாத்திரத்தில், அவள் குழந்தைகள் உரிமை ஆர்வலராகத் தன் பணியைத் தொடங்கினாள். ஆனால் விரைவில் தாலிபான்கள் பள்ளத்தாக்கிற்குத் திரும்பினர். பள்ளிகள் மீண்டும் அழிக்கப்பட்டன. சுதந்திரத்தை ஆதரிப்பவர்கள் தூக்கிலிடப்பட்டனர்.



மலாலா மனம் தளரவில்லை. அவளுக்கு இன்னும் பதினான்கு வயதாகவில்லை என்றாலும், அவள் ஏற்கனவே தனது நாட்டில் ஒரு முக்கியமான நபரானாள்.

அவள் தொடர்ந்து தனது வலைப்பதிவை எழுதினாள். பெண்களின் கல்வி உரிமைக்காக போராடத் தொடர்ந்தாள். மலாலா அடிக்கடி பொது மக்களிடம் பேச அழைக்கப்பட்டாள். அவளது பிரச்சாரத்திற்காக நிறைய உதவிகளைப் பெற்றாள். பாகிஸ்தான் அரசாங்கம் அவளுக்கு முதல் தேசிய இளைஞர் அமைதிப் பரிசை வழங்கியது.

2011ஆம் ஆண்டில், மலாலா பெரிய வெற்றியடைந்தாள். ஒரு கல்வி அடித்தளத்தை உருவாக்கினாள். இது அவளுக்கும் அவளுடைய வேலையை ஆதரிப்பவர்களுக்கும் உதவியது. ஆனால் அவளது குடும்பம் தாலிபான்களால் அச்சுறுத்தப்பட்டது. தாலிபான் போராளிக் குழுவிற்கு மலாலா தந்தையின் பள்ளிகள் அல்லது மலாலாவின் செயல்பாடுகள் பிடிக்கவில்லை.



அக்டோபர் 9, 2012 அன்று, மலாலா பள்ளிப் பேருந்தில் வீட்டிற்குச் சென்றாள். பேருந்து திடீரென்று நின்றுவிட்டது. ஒரு நபர், டிரைவரிடம், "இது குஷால் பள்ளிப் பேருந்தா?" என்று கேட்டான். இரண்டாவது நபர், பேருந்திற்குள் நுழைந்து, "யார் மலாலா?" என்றான். யாரும் பதிலளிக்கவில்லை, ஆனால் சில மாணவர்கள் தங்கள் நண்பரைப் பார்த்தனர். மலாலா யார் என்பது தெளிவாகத் தெரிந்தது - அவள் மட்டுமே பேருந்தில் தலைக்கவசம் அணியாமல் இருந்தாள். இரு நபர்களில் ஒருவர், மலாலாவை மூன்று முறை சுட்டான். எல்லோரும் அலறினர்.

மலாலா தனது சிறந்த தோழியின் மடியில் சாய்ந்தாள். பேருந்து ஓட்டுநர் ஸ்வாட் பள்ளத்தாக்கில் உள்ள மருத்துவமனைக்கு வேகமாகச் சென்றார்.



பாகிஸ்தான் ஜனாதிபதி, மற்ற அரசியல்வாதிகள் மற்றும் பிரபல முஸ்லிம்களுடன் சேர்ந்து, படுகொலை முயற்சியை கண்டித்தார். தாலிபான் பொறுப்பேற்றனர். மலாலா உடல்நிலை சரியில்லை. அவளுடைய தந்தை, "மலாலா இடத்தை நானே நிரப்புவேன்" என்று உரத்த குரலில் அழுதார். இங்கிலாந்தின், பர்மிங்காமில் உள்ள மருத்துவமனையில் மலாலா சிகிச்சை பெற, மருத்துவர்களும் அரசாங்கமும் உதவ முடிவு செய்தனர். மலாலா தனியாக செல்ல வேண்டும், ஏனென்றால் அவளது தந்தை தனது தாயையும் சகோதரர்களையும் பாகிஸ்தானில் தனியாக விட்டுச் செல்வது மிகவும் ஆபத்தானதாகும். அவள் இங்கிலாந்தில் சிகிச்சை முடிந்து எழுந்தவுடன் குழப்பமடைந்தாள், ஆனால் அவள் பெற்றோரிடம் தொலைபேசியில் பேசினாள். இறுதியாக அவள் குடும்பம் இங்கிலாந்திற்கு வந்தது. உலகம் முழுவதிலுமிருந்து கடிதங்களும் பரிசுகளும் அவளிற்கு அனுப்பப்பட்டன.



பல அறுவை சிகிச்சைகள் மற்றும் குணமடைய நிறைய நேரம் கழித்து, மலாலா பர்மிங்காமில் வகுப்புகளை தொடர்ந்தாள். தாலிபான்களால் மலாலாவை அமைதிப்படுத்த முடியவில்லை. கல்வி உரிமைகளுக்காக தொடர்ந்து போராடி வருகிறாள் மலாலா. பாகிஸ்தானில் ஆரம்பப் பள்ளிக்குச் செல்ல உரிமை இல்லாமல் ஐம்பது இலச்சத்திற்கும் அதிகமான குழந்தைகள் உள்ளனர். அவர்களில் பெரும்பாலானோர் பெண்கள். ஆப்கானிஸ்தான், நைஜீரியா மற்றும் நேபாளம் போன்ற பிற நாடுகளில் உள்ள இளம் பெண்களுடன் மலாலா அனுதாபம் கொள்கிறாள். அந்நாடுகளில் பெண்களுக்கான கல்விக்கு மதிப்பளிக்கவில்லை.









சிறிய குழந்தைகளைப் பார்த்துக் கொள்ளவும், சமைக்கவும், வீட்டு வேலை செய்யவும், கிணறுகளில் தண்ணீர் எடுக்கவும் பெண்கள் வீட்டில் இருக்க வேண்டும் என்று பலர் நம்புகிறார்கள். பெண்கள் பெரும்பாலும் இளம் வயதிலேயே திருமணம் செய்து கொள்ள வேண்டும், ஆண்கள் மட்டுமே வேலை செய்ய வேண்டும் என்று பல குடும்பங்கள் நம்புகின்றன. இந்தக் கருத்துக்கள் அனைத்தையும் மலாலா ஏற்பதில்லை.



மலாலாவின் பதினாறாவது பிறந்தநாளான ஜூலை 12, 2013 அன்று, நியூயார்க் நகரில் ஐக்கிய நாடுகள் சபையில் அவள் பேசுவதை உலகம் முழுவதிலுமிருந்து நூற்றுக்கணக்கான மக்கள் கேட்டனர். படுகொலை செய்யப்பட்ட பாகிஸ்தான் பிரதமர் பெனாசிர் பூட்டோவின் சால்வையை மலாலா அப்பொழுது அணிந்தாள்.
"ஒவ்வொரு குழந்தையின் கல்வி உரிமைக்காக குரல் கொடுக்க நான் இங்கு வந்துள்ளேன். தாலிபான்களின் மகன்கள் மற்றும் மகள்கள் மற்றும் அனைத்து பயங்கரவாதிகள் மற்றும் தீவிரவாதிகளுக்கும் கல்வி உரிமை அளிக்க வேண்டும்."

அவள் மார்ட்டின் லூதர் கிங் ஜூனியர், நெல்சன் மண்டேலா மற்றும் மகாத்மா காந்தி பற்றி அப்பொழுது பேசினாள்.
"வறுமை, அறியாமை, அநீதி, இனவெறி, அடிப்படை உரிமைகள் பறிக்கப்படுதல் ஆகியவை ஆண் பெண் இருபாலரும் சந்திக்கும் முக்கியப் பிரச்சனைகளாகும்."

பெண்களின் உரிமைகள் மற்றும் பெண் கல்வி பற்றியும் பேசினாள்.
"ஒரு காலத்தில் பெண் சமூக ஆர்வலர்கள், ஆண்களை தங்கள் உரிமைகளுக்காக எழுந்து நிற்குமாறு கேட்டுக் கொண்டனர். ஆனால் இந்த முறை அதை நாமே செய்வோம்."

மலாலா இதயங்களில் நம்பிக்கையையும், கண்களில் கண்ணீரையும் வரவைத்தாள்.
"ஒரு குழந்தை, ஒரு ஆசிரியர், ஒரு பேனா மற்றும் ஒரு புத்தகம் உலகை மாற்றும்."

அடுத்த ஆண்டு, மலாலா அமைதிக்கான நோபல் பரிசைப் பெற்றாள். பதினேழு வயதில், மதிப்புமிக்க விருதைப் பெறும் இளைய நபர் இவளாவாள்.

ஆனால், மாதுளை மற்றும் அத்தி மரங்கள் பூக்கும் அழகான ஸ்வாட் பள்ளத்தாக்கு இன்னும் சுதந்திரமாக இல்லை. மலாலாவுக்கும் அவளது குடும்பத்தினருக்கும் கொலை மிரட்டல் இருந்ததால், அவர்கள் வீட்டிற்கு செல்ல இயலவில்லை.

ஆயுதங்கள் இன்னும் ஆட்சி செய்தன. ட்ரோன்களில் இருந்து குண்டுகள் பாயும் காட்சிகள் ஒலித்தன. சண்டையின் விளைவாக இரு தரப்பிலும் பலி எண்ணிக்கை உயர்ந்தன-சில நேரங்களில் அப்பாவிகள் பலியானார்கள். பாகிஸ்தானில் அமைதி விரைவில் வெற்றிபெறும் என்ற நம்பிக்கையுடன் மலாலா அமெரிக்க அதிபரிடம் நிலைமை குறித்து பேசினாள்.

மலாலா தனது பிரியமான பள்ளத்தாக்கில் போருக்கு பதிலாக, புத்தகங்கள் மற்றும் குறிப்பேடுகளை கனவு காண்டாள்.



அமைதிக்கான நோபல் பரிசு மலாலாவுக்கு சிறகுகளை வழங்கியது. அவள் லெபனானில் உள்ள சிரியா நாட்டின் அகதிகள் முகாம்களைப் பார்வையிட்டாள், நைஜீரியாவில் பள்ளித் திட்டங்களை ஆதரித்தாள் மற்றும் பல நற்பணிகளை மேற்கொண்டாள்.

ஐக்கிய நாடுகள் சபை, மலாலாவின் பதினாறாவது பிறந்தநாளான ஜூலை 12, 2013 அன்று மலாலா தினமாக அறிவித்ததிலிருந்து மலாலா உலகம் முழுவதும் அறியப்பட்டாள். ஒவ்வொரு குழந்தைக்கும் பள்ளிக்குச் செல்லவும், எழுதவும், எண்ணவும் கற்றுக்கொள்ளவும், வாசிப்பின் மகிழ்ச்சியை அறியவும், உரிமை உண்டு என்று அந்நாள் கொண்டாடப்படுகிறது.
சுதந்திரமாக வாழவும்!!!





மலாலாவைப் போற்றும் விதமாக இப்புத்தகம் வெளியிடப்பட்டுள்ளது.

மலாலா - பெண் கல்வி ஆர்வலர், 1997 முதல் இன்று வரை.....

தொடரட்டும் இச்சிறுமியின் நற்பணிகள்!!!